# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

என். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சே. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

முறையீட்டு மனு எண். 925/பே/2016

ஆணை எண். 110/2017

நாள் : 12/05/2017

திரு. P. கந்தசாமி,
பெருமாள் கவுண்டன் வகை,
கன்னிவாடி, திருப்பூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
கன்னிவாடி பேரூராட்சி,
கன்னிவாடி, திருப்பூர் மாவட்டம். – எதிர்மனுதாரர்

திருப்பூர் மாவட்டம், கன்னிவாடி பேரூராட்சியில் வசிக்கும் திரு. P. கந்தசாமி என்பவரின் 03.09.2016 மற்றும் உரிய படிவத்தில் 21.12.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 0925/2016 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது :-

## ஆணை

திருப்பூர் மாவட்டம், கன்னிவாடி பேரூராட்சியைச் சேர்ந்த திரு. P. கந்தசாமி என்பவர், தனது முறையீட்டு மனுவில், கன்னிவாடி பேரூராட்சி வாராந்திர சந்தை 2014–15 வருடத்திற்கு ரூ. 25,57,800/–க்கு ஏலம் போனதாகவும், ஆனால் 2015-16–ஆம் வருடத்திற்கு ரூ. 24,55,000/–க்கு ஏலம் குறைந்து போயுள்ளதாகவும், ஆனால் 2014–15–ஆம் ஆண்டை விட 2015–16–ஆம் ஆண்டிற்கு சந்தைக்கு வரும் எல்லா இனங்களுக்கும் சந்தை கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதாகவும், கட்டணம் உயர்த்தியபிறகு ரூ.1,02,800/–க்கு குறைவாக ஏலம் போய் உள்ளது என்றும் இதன்பொருட்டு அரசு மற்றும் பேரூராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் மேலும் பேரூராட்சி நிர்ணயித்த கட்டணத்தை விட அதிக கூடுதல் கட்டணம் வசூலிப்பதாகவும், எனவே, 2014–15, 2015–16–ஆம் ஆண்டின் ஏலத்தொகை வருவாய் கணக்கிட்டு தணிக்கை செய்து பேரூராட்சிக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்திய நபர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டுள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக, முறைமன்ற நடுவ அழைப்பாணை எண்.925/2016/TPT நாள்: 28.11.2016 வாயிலாக 21.12.2016 அன்று விசாரணைக்கு முறையீட்டு மனுதாரர் அழைக்கப்பட்டார். மேற்படி விசாரணையின்போது முறையீட்டு மனுதாரர் பின்வருமாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:-

*"கன்னிவாடி பேரூராட்சியில் வாரச்சந்தை 2014-2015 ஆண்டுக்கு ஏலம் போனதைவிட 2015–2016க்கு ஏலத் தொகை குறைந்து போய் உள்ளது. ஆனால் சந்தைக்கு வரும் எல்லா இனங்களுக்கும் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால் ஏலத்தொகை மட்டும் குறைவாக உள்ளது. எனவே இதன் மூலம் ரூ.15 லட்சம் பேரூராட்சிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. இது குறித்து மாவட்ட ஆட்சியருக்கு மனு*

கொடுத்தேன். ஆனால் நிர்ணயித்த கட்டணத்தை விட அதிகமாக வசூல் செய்கிறார்கள். அதற்குரிய ரசீதும் கொடுக்கவில்லை, கேட்டால் செயல் அலுவலர் மற்றும் தலைவர் இருவருக்கும் சேர்த்து ரூ.10 லட்சம் கொடுத்துள்ளோம் என்று குறிப்பிடுகிறார் எனவே, இந்த இழப்பை ஏற்படுத்தியவர்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டு இழப்பை அவர்களிடம் வசூல் செய்யவும் கேட்டு இத்துடன் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் செயல் அலுவலரிடம் பெறப்பட்ட கடித நகலையும் இணைத்துள்ளேன்.

கன்னிவாடி பேரூராட்சி செயல் அலுவலருக்கு 24.3.2015 நாளிட்ட தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கோரப்பட்ட தகவல்களுக்கு 1.4.2015 நாளிட்ட செயல் அலுவலர் கடிதத்துடன் 26.3.2015 அன்று நடைபெற்ற சாதாரண கூட்ட நிகழ்ச்சி குறிப்பில் அருகில் உள்ள மாலமேடு முத்தூர் மற்றும் குண்டடம் ஆகிய வாரச்சந்தைகளுக்கு ஆடு மாடு சென்றுவிடுகிறது என்று செயல் அலுவலர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் மாலமேடு சந்தையில் ஆடுமாடு சந்தை நடைபெறவில்லை. இது பொய்யான தகவல். நான் மாவட்ட ஆட்சி தலைவருக்கு மனு செய்த பின் அவசர அவசரமாக எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும். வேளாம்பூண்டி ஊராட்சி தலைவர் மாலமேடு சந்தையில் ஆடு விற்பனைக்கு வருவதில்லை என்று கொடுத்த கடிதம் இன்று சமர்ப்பித்துள்ளேன்," என்று தெரிவித்தார்.

3. மேலும், முறையீட்டு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சிகள் S.செண்பகவேல், R. கார்த்திகேயன் என்பவர்கள் மேற்படி வாரச்சந்தை ஏலம் குறைவாகவே போனதாகவும், ஒப்பந்தப்புள்ளி வெளிப்படையாக நடத்தவில்லை என்றும் ரகசியமாக நடத்தியுள்ளார்கள் என்றும் கட்டணம் முன்பைவிட அதிகமாக உள்ளது என்றும் தெரிவித்து வாரச் சந்தை ஏலம் சம்பந்தமான விவரங்கள் அடங்கிய கடித நகல் மற்றும் 26.3.2015ம் தேதிய மன்றக் கூட்டப் பொருள்களின் நகலினை சமர்ப்பித்துள்ளனர்.

4. இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண்.925/16/TPT நாள்: 28.11.2016 வாயிலாக கன்னிவாடி பேரூராட்சி செயல் அலுவலர் 22.12.2016 அன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டார். விசாரணையின் போது செயல் அலுவலர் முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ளபடி வார சந்தை 2014-15-ஆம் ஆண்டில் ரூ.25,57,000/-க்கு ஏலத்திற்கு போனது என்றும் 2015-16ஆம் ஆண்டு ரூ.24,55,000/-க்கு ஏலம் போனதாகவும் உறுதி செய்தார். மேலும் ஏலத்தை நடத்தியவர் திரு. ஈஸ்வர மூர்த்தி என்றும் தற்பொழுது அவர் ஈரோடு மாவட்டம், சிவகிரி பேரூராட்சியில் செயல் அலுவலராக உள்ளார் என்றும் தெரிவித்தார். எனவே, முறைமன்ற நடுவ அழைப்பாணை எண். 925/2016/TPT/22.12.2016 வாயிலாக முந்தைய செயல் அலுவலர் திரு ஈஸ்வரமூர்த்திக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, 02.01.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின்போது முந்தைய செயல் அலுவலர் கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார் :-

*"2014ஆம் ஆண்டு முதல் 28.2.2016 வரை கன்னிவாடி பேரூராட்சியில் பணிபுரிந்தேன். 2014-15 வருடத்திற்கு வாரச் சந்தைக்கு 25,57,800/- ஏலம் நிர்ணயம் செய்யப்பட்டது. 2014-15 ஏலத்தொகையாக 25,57,800/- 2012–13 ஆண்டு ஏலம் விடப்பட்டதாகும். ஏலம் விடப்பட்ட 3ஆம் ஆண்டு இறுதியில் ஒவ்வொரு ஆண்டும் 5% உயர்வு என்ற அளவில் 2014-15 ஆண்டு ரூ.25,57,700/- ஏலத் தொகை நிர்ணயிக்கப்பட்டது 2015–16 உரிய முறையில் பத்திரிக்கையில் விளம்பரம் செய்து ஏலம் போட்டோம். 2015-16 ஆண்டு ரூ.24,55 ,000/– ஏலம் போனது. அப்பொழுது வறட்சி அதிகமாக ஏற்பட்டது. அதன் காரணமாகவும் 2013-14 ஆண்டு முத்தூரில் 2012-13 ஆண்டுக்கு பின்பே ஆட்டுச் சந்தை உருவாக்கப்பட்டது. இச்சந்தையில் 10,000 ஆடுகள் வரை அங்கு கூடுவது வழக்கம். அதற்கு பிறகு மெல்ல ஆடு வரத்து குறைந்தது. 2015-2016 ஆண்டுகளில் முத்தூர், குண்டடம் பெரிய சந்தை என்பதால் அங்கு சென்றுவிடுவதால் 2015-16 ஏலம் விடும்பொழுது முதல் தடவையாக 4 பேர் கலந்து கொண்டார்கள். அடுத்த ஏலம் 20.2.2015. அப்பொழுதும் ஒருவரும் ஏலம் கேட்கவில்லை. 11.3.2016ல் ஏலம் நடந்தது. அப்பொழுது 16 பேர் கலந்து கொண்டார்கள். திரு. விருமாண்டி என்பவர் அதிக பட்ச தொகைக்கு ஏலம் கேட்டார். அவருக்கு அது உறுதி செய்யப்பட்டது. திரு. கந்தசாமி என்பவருடைய மனு எனக்கு தெரியும். அந்த மூன்று ஏலங்களுக்கு பத்திரிக்கை விளம்பரங்களை இத்துடன் சமர்ப்பிக்கிறேன். மனுதாரர் ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை. மனுதாரர் கந்தசாமி எப்பொழுதும் மனுதாரராகவே இருக்கிறார். ஏலம் நடந்த நிகழ்ச்சி குறிப்பையும் இத்துடன் சமர்ப்பிக்கிறேன்."* என்று தெரிவித்தார்.

5. மேற்கூறிய நிலையில் முறையீட்டு மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட குற்றச் சாட்டுகளுக்கு செயல் அலுவலர் 02.01.2017 நாளன்று நடைபெற்ற விசாரணையின்போது ஏலம் விடப்பட்டதில் முறைப்படி 5% உயர்வு வைத்து மூன்றாண்டுகளுக்கு சேர்த்து 2014-2015ல் ஏலம் விடப்பட்டதாகவும், மற்றும் ஏலங்கள் உரிய வழிமுறைப்படி நடத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். எனினும் முறையீட்டு மனுதாரர், ஏலம் எடுத்த நபர் குறித்து தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக, ஏலதாரர் ஒப்பந்த நிபந்தனைகளின்படி கட்டணம் வசூல் செய்கிறாரா அல்லது அதிக வசூல் செய்கிறாரா என்பது குறித்து திடீர் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் எனவும் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் மிரட்டி வசூல் செய்யாமல் பொது ஒப்பந்த பணிகளை நிபந்தனைகளுக்கு உட்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகிறதா என்பதை கண்டிப்புடன் கண்காணிக்கும்படியும் செயல் அலுவலரை அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017– ஆம் ஆண்டு, மே திங்கள், 12–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி, அனுப்பப்படுகிறது/

15.5

செயலாளர்

15.5

15.5.17

பெறுநர்

1. திரு. P. கந்தசாமி,
கன்னிவாடி பேரூராட்சி மன்ற முன்னாள் கவுன்சிலர்,
பெருமாள் கவுண்டன் வலசு,
கன்னிவாடி, திருப்பூர் மாவட்டம்.

2. செயல் அலுவலர்,
கன்னிவாடி பேரூராட்சி,
கன்னிவாடி, திருப்பூர் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்